**தலைப்பு 261 – காலி மாவட்ட செயலகம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

காலி மாவட்ட செயலகத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றை உள்ளடக்கிய 2018 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் காலி மாவட்ட செயலகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2019 மே 27 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் மாவட்ட செயலகத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 மே 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான காலி மாவட்ட செயலகத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் இலங்கை சுங்கத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அரசின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணப்படுகின்றது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியதுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வு செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றை வழங்குவது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

தொழில்சார் தீர்ப்புக்கள் மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீடு செய்யும் போதும் சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு மாவட்ட செயலகத்தின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருதவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது என்பதனை மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

- எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(ஈ) பிரிவு மற்றும் 38 ஆம் பிரிவுகளின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) காலி மாவட்ட செயலகத்தால் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமைால் மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக கூறுவதற்கு முடியாதுள்ளது

(ஆ) காலி மாவட்ட செயலகத்தால் திணைக்களத்தினால் முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கும் தேவைப்பாடு இல்லாதிருந்தமையால் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதி நிலைமை தொடர்பான கூற்று

பின்வரும் கணக்கீட்டு குறைபாடுகள் வெளிப்படுத்தப்பட்டன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்றின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஆதனம், பொறி, உபகரணம் என்பவற்றின் பெறுமதி ரூபா 2,355,604,474 ஆக இருந்ததுடன் ஏசீஏ-6 படிவத்தின் பிரகாரம் 2018 சனவரி 01 ஆந் திகதியில் உள்ளவாறான அப் பெறுமதி ரூபா 1,984,474,798 ஆகக் காட்டப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஆரம்ப மீதி ரூபா | ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் ஆரம்ப மீதியின் வேறுபாட்டை இனங்கண்டு கணக்குகளைச் சரிசெய்தல் வேண்டும். | கணக்கீடு செய்யப்படாத ஆதனம் பொறி மற்றும் உபகரணங்கள் அடுத்து வரும் இரண்டு ஆண்டுகளுக்குள் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கிறேன். |

| | | | |
|---|---|---|---|
| | 371,129,676 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (ஆ) | பெந்தோட்டை மற்றும் அம்பலாங்கொடை பிரதேச செயலகங்களின் ரூபா 110,987,637 கூட்டு மொத்தமான சொத்துக்கள் மற்றும் மாவட்ட செயலகம் அமைந்துள்ள காணியின் ரூபா 311,500,000 பெறுமதி நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | மாவட்ட செயலகத்தின் மற்றும் உரிய அனைத்து பிரதேச செயலகங்களின் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் பெறுமதி நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படுதல் வேண்டும். | இந்த ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் திறைசேரியின் ஏடுகளில் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன் 2019 ஆம் ஆண்டின் போது இவ் வேறுபாட்டைச் செம்மையாக்குவதற்காக மாற்றல் பத்திரம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | கரந்தெனிய பிரதேச செயலகத்தில் 2006 ஆம் ஆண்டில் இடம் பெற்ற காசோலை மோசடிகள் காரணமாக அத்திகதியிலிருந்து கட்டு நிதிக் கணக்கில் உருவாகியிருந்த ரூபா 194,086 தீர்த்து வைக்கப்படாத மீதிகளைத் தீர்த்து வைப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிகை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தீர்த்து வைக்கப்படாத கட்டு நிதி மீதியை விரைவாகத் தீர்த்து வைப்பதற்குத் தேவையான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உரிய தரப்பினர்களிடமிருந்து அறவீடு செய்து தீர்த்து வைக்கப்படும் வரை நி.பி 106 இன் பிரகாரம் அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு அறிக்கையிட்டு தற்காலிக முற்பணக் கணக்கிலிருந்து பணத்தை பெற்றுக்கொள்ளுமாறு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்தால் தெரிவிக்கப்பட்டிருந்தது. அதற்கிணங்க அதற்காக அரசாங்க கணக்குகள் திணைக்களத்திற்கு 2018 ஒக்தோபர் 28 ஆந் திகதி அனுப்பி வைக்கப்பட்ட விபரமான அறிக்கைக்காக 2019 மே 03 ஆந் திகதி வரையும் முற்பணங்கள் கிடைத்திருக்கவில்லை. |

**1.6.2 காசுப் பாய்ச்சல் கூற்று.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாகிய பணம் காசுப் பாய்ச்சல் கூற்றில் வருமானமற்ற பெறுவனவாக ரூபா 6,501,047,579 காட்டப்பட்டிருந்தது. கணக்காய்விற்குச் | 2018 நவம்பர் 21 ஆந் திகதிய 267/2018 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கையிலுள்ள ஒழுங்கு விதிகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காசுப்பாய்ச்சல் கூற்றிற்கு 261 ஆம் இலக்க தலைப்பில் மற்றும் ஏனைய வரிசை அமைச்சு மற்றும் திணைக்களத்திற்குரிய பெறுவனவுகளும் கொடுப்பனவுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. காசேட்டில் காசு மற்றும் குறுக்குப் பதிவுகள் ஆகிய இரண்டு பெறுமதிகளின் மொத்தத்தின் அடிப்படையில் |

| | | | |
|---|---|---|---|
| | சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் அது ரூபா 6,374,670,555 ஆக இருந்தது. அதற்கிணங்க ரூபா 126,377,024 அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | | காசுப்பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | முதலீட்டு நடவடிக்கையிலிருந்து உருவாகிய காசுப்பாய்ச்சலில் முற்பணக் கணக்கின் கீழ் பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் தவணைப் பணங்களின் பெறுமதி ரூபா 126,377,024 ஆக இருந்தும் அப் பெறுமதி பெறுவனவாகக் காட்டப்பட்டிருக்கவில்லை. | - மேற்படி - | |

### 1.6.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றிலுள்ள ஏற்பாடுகளுடனான இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்படுகின்றது.

**அவதானிப்புக்கள்**

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுக்கான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|---|---|
| (அ) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை** | **ரூபா** | | | |
| | (i) நிதிப்பிரமாணம் 104(i) | 372,619 | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மாவட்ட செயலகம் மற்றும் இரண்டு பிரதேச செயலகங்கள் தொடர்பான 03 வாகன விபத்துக்கள் சம்பந்தமாக தொடர்புபட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகன விபத்துக்கள் சம்பந்தமாக தொடர்புபட்ட பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2018 பெப்ரவரி, மார்ச் மற்றும் ஏப்ரல் மாதங்களின் போது இடம் பெற்ற விபத்துக்கள் சம்பந்தமாக நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரமான அறிக்கை 2019 மே மாதத்தின் போது தயாரிக்கப்பட்டதுடன் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் 2019 மே மாதத்தின் போது |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | | நியமிக்கப்பட்ட விசாரணை சபையின் அறிக்கை பெற்றுக்கொள்ளப்பட உடன் மேலதிக நடவடிக்கைகளை எடுப்பேன். |
| (ஆ) | நிதிப்பிரமாணம் 136 | 62,708,597 | காலி மாவட்ட செயலாளரின் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிக்கும் வேலைக்காக 2018 நவம்பர் 30 ஆந் திகதி உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டிருந்தது. அதற்காக நிதி ஏற்பாட்டினை வழங்குவது தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்கு நிதி ஏற்பாட்டினை வழங்குவதற்குரிய தகவல்கள் பேணப்படுதல் வேண்டும். | செயற்திட்டத்திற்குத் தேவையான நிதி ஏற்பாடு முழுவதும் செயற்திட்ட ஆரம்பத்திலேயே ஒதுக்கீடு செய்யப்படாதிருந்ததுடன் 2018 ஆம் ஆண்டிற்காகக ரூபா 16.9 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக எஞ்சிய நிதி ஏற்பாடு 2019 ஆம் ஆண்டின் போது ஒதுக்கீடு செய்யப்பட்டது. எனக் குறிப்பிடுகிறேன் |
| (இ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஏற்பாடுகள். ---------------------------------------------------------------- | | | | |
| | 5.3.1 (ஈ) வழிகாட்டி | 7,513,778 | அங்கீகரிக்கப்பட்ட கேள்வி கோரும் ஆவணங்கள் பெறுகைக் குழுவினாலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவினாலும் பரீட்சிக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட வேண்டியிருந்தது. மாவட்ட செயலகத்தின் கேட்போர் கூடத்திற்காக வயர்களற்ற ஒலிபெருக்கி முறைமையின் பெறுகையின் போது கேள்வி கோரல் ஆவணங்கள் சம்பந்தமாக தொடர்புபட்ட வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | விலைமனுக்கள் கோருவதற்கான மாதிரி மாவட்ட செயலகத்தின் பொறியியலாளரின் மேற்பார்வையின் கீழ் தகவல் தொடர்பாடல் உதவி உத்தியோகத்தரால் தயாரிக்கப்பட்டதுடன் கேள்வி ஆவணங்கள் கணக்குகள் பிரிவினால் தயாரிக்கப்பட்டது. மாவட்ட செயலாளரின் அங்கீகாரத்தின் கீழ் விலைகள் கோரப்பட்டுள்ளன. |

**2. நிதி மீளாய்வு**

**2.1 வைப்பு மீதிகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் கீழே தரப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| மாவட்ட செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுக்குரிய 04 வைப்புக் கணக்குகளின் 2019 மே 13 ஆந் திகதியில் உள்ளவாறு 02 ஆண்டுகளுக்கு மேற்பட்டு காலங் கடந்த ரூபா 206,118,286 கூட்டு மொத்தமான வைப்பு மீதிகள் சம்பந்தமாக நிதிப் பிரமாணம் 570 மற்றும் 571 இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | காலங்கடந்த வைப்புக்கள் சம்பந்தமாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | 2018 திசெம்பர் 31 இல் உள்ளாறு 02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட காலங்கடந்த வைப்பு மீதிகளில் 2019 மே 14 ஆந் திகதி வரை ரூபா 5,125,624 தீர்த்து வைக்கப்பட வேண்டிய மீதி ரூபா 206,118,286 ஆம் |

**2.2 முற்பணக் கணக்கு மீதி**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆந் திகதி வரை 08 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவீடு செய்ய வேண்டியிருந்த ரூபா 947,400 தொகையான கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு முடியாதிருந்தது. | அறவீடு செய்ய வேண்டியிருந்த கடன் மீதிகளை பிணையாளர்களிடமிருந்து அல்லது ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்து தாமதமின்றி அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஓய்வு பெற்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளை ஓய்வூதிய பணிக்கொடையிலிருந்தும் வேலையிலிருந்து இடைநிறுத்தி வைக்கப்பட்ட உத்தியோகத்தர்கள் சம்பந்தமாக நீதிமன்றத்தில் காணப்படும் வழக்கு நடவடிக்கைகள் முடிவடைந்த பின்னரும் சேவையை விட்டுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகள் பிணையாளர்களால் செலுத்தப்படாதுள்ளதனால் சட்ட நடவடிக்கைகளின் மூலமும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2014 பெப்ரவரி 17 ஆந் திகதியில் 01/2014 ஆம் | 19 பிரதேச செயலகங்களின் | எதிர்காலத்தில் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை |

| | | |
|---|---|---|
| இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டிற்காக செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தும் மாவட்ட செயலகத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்டுள்ள 19 பிரதேச செயலகங்களின் எதிர்பாாத்த பெறுபேறுகளை நிறைவேற்றும் வகையில் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்பார்த்த பெறுபேறுகளை நிறைவேற்றும் வகையில் செயல் நடவடிக்கைத் திட்டத்தை மேலும் அபிவிருத்தி செய்து தயாரித்தல். | உள்ளடக்கி பிரதேச அபிவிருத்திகளை ஏற்படுத்தக்கூடிய வகையில் கணக்காய்வு எதிர்பார்க்கும் முறையில் செயல் நடவடிக்கைத் திட்டத்தை தயாரிப்பதற்கு எதிர்பார்க்கிறேன். |

**3.2 பணம் விடுவிக்கப்பட்டிருந்தும் செயல் முன்னேற்றம் இடைந்து கொள்ளப்படாத செயற்திட்டங்கள்.**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| 2017 மே மாதத்தில் தாக்கத்தை ஏற்படுத்திய வெள்ளம் மற்றும் மண்சரிவு பாதிப்புக்குள்ளாகிய பிரதேசங்களில் உட்கட்டமைப்பு வசதிகளின் புனரமைப்பு நடவடிக்கைகளுக்காக காலி மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டின் கீழ் கடவத் – சதர பிரதேச செயலகம் தொடர்பாக 199 செயற்திட்டங்களில் மதிப்பீட்டுப் பெறுமதி ரூபா 93 மில்லியனுக்குரிய 92 செயற்திட்டங்களின் வேலைகளுக்காக உடன்படிக்கை செய்யப்பட்ட ஆரம்பக் கட்டத்தில் நிறுத்தப்பட்டிருந்தன. மேலும் ரூபா 84 மில்லியன் மதிப்பீட்டுப் பெறுமதிக்குரிய 23 செயற்திட்டங்களின் வேலைகள் சம்பந்தமாக உடன்படிக்கைகள் செய்து கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வெள்ள ஆபத்து குறைந்ததன் பின்னர் தாமதமின்றி செயற்திட்டங்களின் பெறுகைகளை ஆரம்பித்து செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துதல். | காணப்பட்ட சாதகமற்ற கால நிலைமையின் காரணமாக பெறுகை நடைமுறைகளைப் பூர்த்தி செய்வதற்கு போதியளவு காலம் இல்லை எனக் கூறி அமுல்ப்படுத்தும் நிறுவனம் அச் செயற்பாடுகளிலிருந்து விலகிக் கொண்டதனாலும் நாட்டில் காணப்பட்ட சாதகமற்ற காலநிலைத் தாக்கத்தின் காரணமாகவும் இச் செயற்திட்டங்களை அமுல்ப்படுத்த முடியாதிருந்தது. |

**3.3 ஏனைய அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்துதல்.**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | ஏனைய 32 அமைச்சுக்கள், 21 திணைக்களங்கள் மற்றும் ஒரு அலுவலகத்தால் பல்வேறு செயற்பாடுகளுக்காக ரூபா 5,831.17 மில்லியன் கூட்டு மொத்தமான நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் இறுதி வரை அவற்றில் ரூபா 3,863.46 மில்லியன் மொத்த தொகை மாத்திரம் பயன்படுத்தப்பட்டிருந்தன. அதற்கிணங்க வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டில் ரூபா 1,967.71 மில்லியன் அல்லது 33.74 சதவீதமான நிதி | உரிய, அமைச்சுக்கள் மற்றும் திணைக்களங்களால் பல்வேறு செயற்பாடுகளுக்காக நிதி ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருக்குமாயிருந்தால் அந் நிதி ஏற்பாட்டை ஆண்டின் போதே பயன்படுத்துவதற்கு முடியுமான வகையில் திட்டமிட்டு அமுல்ப்படுத்துதல் வேண்டும். | செலவுகளை முகாமைத்துவம் செய்தல், வவுச்சர்களைச் சமர்ப்பிப்பதற்கு தாமதித்தல், கட்டு நிதிகள் கிடைக்காமை, நிர்மாண வேலைகளைப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தமை ஆகிய காரணங்களால் நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 03 பிரதேச செயலகங்களிடமிருந்து அச் செயலகங்களுக்கு இணைத்துக் கொள்ளப்பட்ட 08 சமுர்த்தி வங்கிச் சங்கங்களின் மூலம் பல்வேறு கடன் நிகழ்ச்சித்திட்டங்களுக்காக 70,181 கடனாளிகளுக்கு ரூபா 381.00 மில்லியன் ஒட்டு மொத்த கடன்கள் வழங்கப்பட்டிருந்தன. 856 கடனாளிகளுக்கு வழங்கப்பட்ட கடன் பணத்தில் ரூபா 46.58 மில்லியன் காலங்கடந்த கடனாகியிருந்தன. 335 கடனாளிகளுக்கு வழங்கப்பட்ட ரூபா 11.28 மில்லியன் கடன் ஐயக் கடனாக இனங்காணப்பட்டிருந்தன. | காலங்கடந்த கடன்களை விரைவாக அறவீடு செய்வதற்கு முறையான வேலைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டியதுடன் கடனை வேண்டிக் கொண்டுள்ள அனைத்து நபர்களின் தகமைகளைப் பரீட்சித்து கடனை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | காலங்கடந்துள்ள கடன்கள் சம்பந்தமாக செயல் முன்னேற்ற மீளாய்வுக் கூட்டத்தின் போது கலந்துரையாடப்பட்டதுடன் கடிதங்களின் மூலம் உரிய கடனாளிகளுக்குத் தெரிவிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே கடனை அறவீடு செய்வதற்காக பொலிஸ் நிலைய பொறுப்பாளரின் உதவியைப் பெற்றுக்கொள்வதற்கும் இணக்க சபைக்கு அனுப்புவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.<br><br>செயற்பாட்டு ஆலோசனைகளின் பிரகாரம் 03 மாதங்கள் கடன் தவணைப் பணத்தை செலுத்தாது கடன் மீதிகள் காலங் கடந்த கடன்களாகக் கருதப்படுவதுடன் 09 மாதங்கள் தவணைப் பணத்தைச் செலுத்தாத கடன் மீதிகள் ஐயக்கடனாகக் கருதப்படுகின்றது. இக் கடன் பெறுனர்கள் வங்கியின் பங்குதாரர்களாக இருப்பதனால் காலங்கடந்திருந்த போதிலும் இக் கடன்கள் செலுத்தப்பட்டு வருகின்றது. |
| (இ) | 2018 ஆம் ஆண்டின் போது மாவட்ட விவசாயப் பிரிவினால் அமுல்ப்படுத்தப்பட்ட உணவு உற்பத்தி தேசிய நிகழ்ச்சித்திட்டத்தின் மூலம் விவசாய உபகரணங்களை பகிர்ந்தளிக்கும் செயற்திட்டத்தின் கீழ் காலி மாவட்டத்திலுள்ள விவாசயிகளுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 1,300,000 பெறுமதியான மோட்டர்களுடனான 60 களைகள் பிடுங்கும் இயந்திரங்கள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. 2019 சனவரி 07 ஆந் திகதி வரை அவற்றில் 30 இயந்திரங்களை நலன்பெறுநர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரசாங்கத்தின் நிதியின் மூலம் கொள்வனவு செய்யப்பட்டுள்ள விவசாய உபகரணங்களை பொருத்தமான நலன் பெறுனர்களைத் தெரிவு செய்து முறையாகப் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பினிகஹன கமநல சேவைகள் நிலையத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ள 30 இயந்திரங்களை மாத்தறை மாவட்டத்திற்கு வழங்குவதற்காக சனாதிபதி செயலகத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஈ) | வெள்ள அனர்த்த நிவவாரணங்களை வழங்கும் செயற்திட்டத்தின் கீழ் வெள்ளத்தால் அனர்த்தத்திற்கு உள்ளாகிய நபர்கள், நிறுவனங்கள், | | ஒரு இடர் பாதுகாப்பு நிலையத்தை நிர்மாணிக்கும் போது காணப்பட்ட அதிக மழையும் வேலைத் தளத்திற்குச் |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் பிரதேசங்களை மீண்டும் நல்ல நிலைக்கு கொண்டு வருவதற்காக ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியின் கீழ் 2017 ஆம் ஆண்டின் போது காலி மாவட்டத்திற்கு ரூபா 184,000,000 நிதி உதவி வழங்கப்பட்டிருந்தது. இந் நிதியுதவியை 05 செலவுக் கூறுகளின் கீழ் பயன்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன. | | செல்லும் பாதைக்கு கொங்ரீட் இட்டு மூடி வைக்கப்பட்டுள்ளமையும் காரணமாக மூலப் பொருட்களை எடுத்துச் செல்வதற்கு முடியாமை ஆகிய காரணங்களால் செயற்திட்ட கால எல்லையின் போது முழுமையாகப் பூர்த்தி செய்வதற்கு முடியாதிருந்தனாலும் மேலும் 04 நிலையங்களை நிர்மாணிப்பதற்காக 15 சதவீத பெறுமதி சேர் வரியுடன் மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருந்தும் பெறுமதி சேர் வரிக்கு பதிவு செய்யாத ஒப்பந்தக்காரரால் நிர்மாணிக்கப்பட்டதாலும் ரூபா 15,579,450 நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.<br><br>மின்பிறப்பாக்கி இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக ரூபா 19,244,060 ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தும் அப் பெறுகை 18,412,320 இற்கு நிறைவேற்றியதன் காரணமாக ரூபா 831,740 சேமிக்கப்பட்டிருந்தது. |
| (i) | இரண்டு கூறுகளின் கீழ் ரூபா 16.41 மில்லியன் நிதி ஏற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு நிதி உதவிகளை உரிய கால எல்லைக்குள் முழுமையாகப் பயன்படுத்துதல் வேண்டும். | |
| (ii) | மேற்கூறிய செயற்திட்டத்திற்குரிய உடன்படிக்கையின் 3 ஆம் நிபந்தனையின் பிரகாரம் செயற்திட்டத்தின் கீழ் மின்பிறப்பாக்கி இயந்திரங்களை வழங்கி பொருத்தும் கட்டளைக்குரிய அனைத்து நடவடிக்கைகளும் 2018 மார்ச் 05 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தது. எனினும் 2018 செப்தெம்பர் 27 ஆந் திகதி வரை நாகொட பிரதேச செயலகத்தில் மின்பிறப்பாக்கி இயந்திரத்தை ஸ்தாபிக்கும் நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கையின் பிரகாரம் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். | நாகொட பிரதேச செயலகம் வெள்ளத்திற்கு உள்ளாகுவதனால் மின் பிறப்பாக்கி இயந்திரத்தை உயரமான இடத்தில் பொருத்த வேண்டியிருந்ததுடன் அந்த பொருத்துதல் நடவடிக்கை தற்பொழுது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. தவறுதலாக செயலாற்றல் பிணையின் காலத்தை நீடித்துக் கொள்வதற்கு முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | மேலும் ஒரு தனியார் வங்கியின் மூலம் சமர்ப்பிக்கப்பட்ட ரூபா 1,823,256 தொகையான செயலாற்றல் பிணையும் 2018 மார்ச் 26 ஆந் திகதியின் பின்னர் காலாவதியாகியிருந்தது. | | |
| (உ) | திரசர பாடசாலைகள் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலை மரப் பூங்கா செயற்திட்டத்திற்காக சனாதிபதி செயலகத்திலிருந்து ரூபா 1,675,080 நிதி ஏற்பாடு 2018 யூலை 02 ஆந் திகதி காலி மாவட்ட செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அச் செயற்திட்டத்தின் கீழ் காலி மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பிரதேச செயலகப் பிரிவிலுள்ள 142 பாடசாலைகளில் நடுவதற்காக 8876 பழ வகை நாற்றுக்கள், மருந்து வகை நாற்றுக்கள் மற்றும் வாசனைத் திரவிய நாற்றுக்கள் பகிர்ந்தளிப்பதற்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தன. எனினும், செயற்திட்ட திட்டங்களை சிறப்பாகவும் விளைதிறனாகவும் அமுல்ப்படுத்தாமையின் காரணமாக நிதி ஏற்பாட்டில் ரூபா 1,100,049 தொகை அதாவது 66 சதவீதமானவை பயன்படுத்தப்படாமையின் காரணமாக அந்த நிதி ஏற்பாடுகள் சனாதிபதி செயலகத்திற்கு திருப்பி ஒப்படைக்கப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்காக பெற்றுக்கொள்ளப்பட்ட நிதி ஏற்பாட்டை உச்ச அளவு விளைதிறனாக பயன்படுத்துதல் வேண்டும். | இந் நிகழச்சித்திட்டத்திற்காக எங்களுக்கு விடுவிக்கப்பட்ட ரூபா 1,675,080 பணத்தில் ரூபா 600,000 தொகையான நிதி ஏற்பாடு ஒப்படைக்கப்பட்டிருந்தது. எஞ்சிய நிதி ஏற்பாட்டில் 46.5 சதவீதமானவை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. நாற்றுக்களை பாடசாலைக்கு எடுத்துச் செல்லும் நடவடிக்கையை தெலிஜ்ஜவில நாற்று மேடை மற்றும் பயிர் வளர்ப்பு பொருட்கள் அலுவலகத்தினால் நிறைவேற்றுவதற்கு இணங்கி கொள்ளப்பட்டிருந்ததனால் போக்குவரத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 34,000 பணம் எஞ்சியுள்ளதுடன் ஒட்டுக் கன்றுகளுக்குப் பதிலாக விதைகளால் வளர்க்கப்பட்ட நாற்றுக்கள் கொள்வனவு செய்யப்பட்டதனால் பணம் எஞ்சியுள்ளது. 142 பாடசாலைகளுக்கு திசெம்பர் மாத விடுமுறைக்கு முன்னர் நாற்றுக்களை வழங்க வேண்டுடியிருந்ததனால் அதன் போது உருவாகிய நடைமுறைச் சிக்கல்களைப் குறைப்பதற்காக சில நிதி ஏற்பாடுகள் மிகையாக மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. |
| (ஊ) | சாதகமற்ற காலநிலையின் காரணமாக இன்னல்களுக்கு உள்ளாகிய மக்களை மீளக்குடியமர்த்தும் செயற்திட்டத்திற்காக காலி மாவட்டத்திற்கு 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 119.20 மில்லியன் நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தை அமுல்ப்படுத்தும் வழிகாட்டிக் கோவையிலுள்ள தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யாத இரண்டு நலன் பெறுநர்களுக்கு ரூபா 1,800,000 செலுத்தப்பட்டிருந்தது. | இடர் முகாமைத்துவ அமைச்சின் வழிகாட்டிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வீடுகள் நிர்மாணிப்பதின் ஒட்டு மொத்த நிலைமையை கருத்தில் கொண்டு தவணைப் பணம் விடுவிக்கப்பட்டிருந்ததுடன் தற்பொழுது வரை ஒரு நலன் பெறுநர் நிர்மாண வேலையை பூர்த்தி செய்துள்ளார். ஏனைய நலன் பெறுநர்களின் இறுதித் தவணைப் பணம் விடுவிக்கப்படாததுடன் அதன் செயல் முன்னேற்றம் சம்பந்தமான அறிக்கையை வழங்குமாறு பிரதேச செயலாளருக்கு |

| | | | |
|---|---|---|---|
| | | | தெரிவிவக்கப்பட்டுள்ளது. |
| (எ) | மேலே (ஊ) பந்தியில் குறிப்பிட்ட செயற்திட்டத்தின் கீழ் அங்கீகரிக்கப்பட்ட திட்டத்திற்கு இணங்க அத்திவாரத்தை தயாரிக்காத ஒரு நலன் பெறுநருக்கு ரூபா 200,000 செலுத்தப்பட்டிருந்தது. தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் மூலம் பரீட்சிக்கப்பட்டு இடர் நெகிழ்வுத் தன்மையற்றது என சிபார்சு செய்யப்பட்ட மேலும் இரண்டு நலன் பெறுநர்களால் நிர்மாணிக்கப்பட்ட இரண்டு வீடுகளுக்காக முதலாவது தவணைப் பணமாக ரூபா 200,000 வீதம் செலுத்தப்பட்டிருந்ததுடன் எஞ்சிய தவணைப் பணக் கொடுப்பனவு நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக 2019 சனவரி 07 ஆந் திகதி ஒரு தொழில்நுட்பக் குழு நியமிக்கப்பட்டிருந்த போதிலும் 2019 பெப்ரவரி 22 ஆந் திகதி வரை அக் குழுவினால் எதுவித சிபர்சுகளும் வழங்கப்பட்டிருக்கவில்லை. | வீடுகளை நிர்மாணிப்பதற்காக வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் நலன்பெறுநர்கள் செயற்பட வேண்டுமென தொடக்கத்திலிருந்தே உரிய உத்தியோகத்தர்கள் மேற்பார்வை செய்யப்படல் வேண்டும். | அத்திவாரத்தை உரிய நியமத்திற்கு இணங்க மீண்டும் தயார்படுத்துவதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன் அது சரி செய்யப்பட்டு 2 மாதங்களுக்குள் செயல் முன்னேற்றத்தை அறிக்கையிடுவதற்கு பிரதேச செயலாளருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது. ஏனைய இரண்டு நலன் பெறுநர்கள் சம்பந்தமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப அறிக்கையின் பிரகாரம் கொடுப்பனவு செய்வதற்கு அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்காக தேசிய கட்டிடங்கள் ஆராய்சிசி அமைப்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. |
| (ஏ) | 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதி நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சினால் 06 லெப்டெப் கணனிகள் வெலிவிடிய திவிதுர பிரதேச செயலகததிற்கு வழங்கப்பட்டிருந்த போதிலும் Intergrade Treasury Information System நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்படாதிருந்ததனால் 2019 பெப்ரவரி 15 ஆந் திகதி வரை அக் கணனிகள் பயன்படுத்தப்படாது களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. | உரிய நிகழ்ச்சித்திட்டத்தை விரைவாக அமுல்ப்படுத்தி கணனியை பயன்பாட்டிற்கு எடுத்துக்கொள்வதற்கு அல்லது நிகழ்ச்சித்திட்டத்தை அமுல்ப்படுத்த முடியாதிருந்தால் அக்காணிகளை மீள ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | பிரதேச செயலகத்தின் Intergrade Treasury Information System நிகழ்ச்சித்திட்டம் அமுல்ப்படுத்தப்படாதிருந்ததனால் அக் கணனிகளை ஏனைய நிகழ்ச்சித்திட்டங்களுக்கு ஈடுபடுத்த முடியாதிருந்ததனால் உரிய லெப்டெப் கணனிகள் களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தன. |
| (ஐ) | கம்பொரலிய நிகழ்ச்சித்திட்டம் 2018 இன் கீழ் தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் மூலம் பத்தேகம பிரதேச செயலகத்தில் திட்டமிடப்பட்ட 216 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக 2018 செப்தெம்பர் 18 ஆந் திகதி ரூபா 95 மில்லியன் காலி மாவட்ட செயலகத்திற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. 2018 திசெம்பர் 12 ஆந் திகதி வரை இலக்கிடப்பட்ட செயற்திட்டங்களில் ரூபா 1,940,000 பெறுமதியான 02 செயற்திட்டங்கள் மாத்திரம் | விரைவாக செயற்திட்ட வேலைகளை ஆரம்பித்து செயற்திட்டத்தின் பணிப்பொறுப்புக்களை ஒப்பந்தக்காரர்களின் மூலம் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | 2018 நவம்பர் மாதத்தின் போது இடம் பெற்ற அரசியல் குழப்பங்களின் காரணமாக கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் தொடக்க வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்பட்டிருக்காத செயற்திட்டங்களை ஆரம்பித்தலை அரசாங்கம் கைவிட்டுள்ளதனால் செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | அழுல்ப்படுத்தப்பட்டிருந்ததுடன் 214 செயற்திட்டங்கள் அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஒ) | தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் மீளாய்வாண்டின் போது அமுல்ப்படுத்தப்பட்ட கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல் விசேட நிகழ்ச்சித்திட்டத்தின் (II ஆம் கட்டம்) மூலம் பத்தேகம பிரதேச செயலகப் பிரிவில் 23 செயற்திட்டங்களை அமுல்ப்படுத்துவதற்காக ரூபா 27.2 மில்லியன் நிதி ஏற்பாடு அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அந்த நிதி ஏற்பாட்டில் 06 செயற்திட்டங்களுக்காக 2018 ஒக்தோபர் 19 மற்றும் 26 ஆந் திகதிகளில் ரூபா 3.00 மிலலியன் நிதி ஏற்பாடு கிடைத்திருந்தது. அவற்றில் 04 செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக 04 சங்ககங்களுடன் உடன்படிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருந்தும் 2018 திசெம்பர் 11 ஆந் திகதி வரை அவ் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்காக ஒப்பந்த உடன்படிக்கைகளை மேற்கொண்டதன் பின்னர் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டங்களை பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுதல் வேண்டும். | அரசியல் நிலையான தன்மை இல்லாததன் காரணமாக பணத்தை பெற்றுக்கொள்ள முடியாமல் போனது. என்ற விடயத்தின் அடிப்படையில் உடன்படிக்கை செய்யப்பட்ட 04 செயற்திட்டங்களை ஆரம்பிக்க முடியாதுள்ளது என கடிதம் கிடைத்துள்ளது. 2018 நவம்பர் 19 ஆந் திகதி வரை வேலைகள் ஆரம்பிக்காத செயற்திட்டங்களை அமுல்ப்படுத்தப்படாது நிறுத்தி வைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டதன் அடிப்படையில் ஏனைய 19 செயற்திட்டங்களையும் அமுல்ப்படுத்த முடியாதுள்ளன. |
| (ஒ) | உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் நிதி ஏற்பாட்டின் கீழ் பத்தேகம செயலகத்தில் அமுல்ப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ வீடுகளை நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக ஒரு கட்டிடத்திற்கு ரூபா 02 மில்லியன் வீதம் 16 கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக ரூபா 32 மில்லியன் நிதி ஏற்பாடு பத்தேகம பிரதேச செயலகத்திற்கு 2017 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்தது. 09 உத்தியோகபூர்வ வீட்டு கட்டிடங்களை நிர்மாணிப்பதற்காக ஏனைய அரசாங்க நிறுவனங்களுக்குச் சொந்தமான காணிகள் பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும் நிர்மாணங்களுக்கு முன்னர் அந் நிறுவனங்களின் சம்மதம் பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிர்மாணங்களுக்காகத் தெரிவு செய்யப்பட்ட மற்றுமொரு காணியில் அத்துமீறிய குடியிருப்பாளர் தற்காலிக வீட்டினை நிர்மாணித்து வருவதனால் அத்திவாரம் மட்டம் வரை நிர்மாணிக்கப்பட்ட உத்தியோகபூர்வ வீட்டு கட்டிடங்களின் நிர்மாணம் கைவிடப்பட்டிருந்தது. | காணிகளின் உரிமையை தெளிவு படுத்தியதன் பின்னரும் பொறுப்பேற்றதன் பின்னரும் நிர்மாண வேலைகளை ஆரம்பித்தல் வேண்டும். | நிர்மாண நடவடிக்கைகளுக்காக காணப்படுகின்ற காணிகளின் பற்றாக்குறை காரணமாக தற்பொழுது மூடப்பட்டு பிரதேச செயலகங்களுக்கு உரிமைகள் ஒப்படைக்கப்பட்டுள்ள பாடசாலைக்காணிகளில் இந் நிர்மாணங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் உரிய காணிகளை முறையாக பொறுப்பேற்றுக்கொள்வதற்காக விடுவிக்குமாறு கல்வி அமைச்சிடம் வேண்டுகோள் விடுவிக்கப்பட்டுள்ளது ஏனைய காணிகளின் அத்துமீறிய குடியிருப்பாளர்களுக்கு காணியில் குடியிருப்பதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. அதன் பின்னர் உத்தியோகபூர்வ வீடுகளின் கட்டிட நிர்மாண வேலைகளை ஆரம்பிப்பதற்கு எதிர்பார்த்துள்ளேன். |

| | | | |
|---|---|---|---|
| (ஔ) | உள்நாட்டு அலவல்கள் அமைச்சினால் காலி கடவத்சதர பிரதேச செயலகப் பிரிவில் ஒரு செயற்திட்டத்திற்காக ரூபா 2 மில்லியன் வீதம் 17 உத்தியோகபூர்வ வீட்டுச் செயற்திட்டங்களுக்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 4,776,000 நிதி எற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2018 செப்தெம்பர் 05 ஆந் திகதியளவில் 12 செயற்திட்டங்களின் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்தும் மாஇடிபே, வெளிவத்த, சங்கமித்தபுர, களுவெல்ல, தங்கெதர ஆகிய உத்தியோகபூர்வ வீட்டுச் செயற்திட்டங்களின் நிர்மாண நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உரிய பிரச்சினைகளைத் தீர்த்து வைத்து விரைவாக செயற்திட்டங்களை ஆரம்பித்து பொது மக்களுக்கு சேவைகளை வழங்குதல் வேண்டும். | காலி மாநகர சபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளாமை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆலோசனையின் பேரில் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்படாமை, தெரிவு வெய்யப்பட்ட காணித்துண்டுகள் போதியளவானதாக இல்லாமை ஆகிய விடயங்களின் காரணமாக 05 உத்தியோகபூர்வ வீட்டுச் செயற் திட்டங்களின் வேலைகளை ஆரம்பிப்பதற்கு முடியாதிருந்தது. |
| (க) | 2017 ஆம் ஆண்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளை நல்ல நிலைக்கு கொண்டு வரும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்குச் சொந்தமான வீதிகளைத் திருத்துதல் தொடர்பான செயற்திட்டத்தின் கீழ் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் 2018 செப்தெம்பர் 13 ஆந் திகதியளவில் உடன்படிக்கை காலம் கடந்த 09 மாதங்களை அண்மித்த காலம் எடுத்திருந்தும் பௌதீக செயல் முன்னேற்றம் 50 சதவீதத்தினை அடைந்து கொள்ளாத ரூபா 14.22 மில்லியன் மொத்த பெறுமதியான 04 வீதி நிர்மாணச் செயற்திட்டங்களின் வேலைகள் இடை நடுவில் கைவிடப்பட்டிருந்தன. | செயற்திட்ட தேவைப்பாடுகளுக்கிணங்க முன்னுரிமைகளை முறையாக இனங்கண்டு அதற்காக போதியளவு நிதி ஏற்பாட்டினைப் பெற்றுக்கொண்டு செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒப்பந்தக்காரர்களுக்கு ஏனைய வேலைகளுக்கு செலுத்துவதற்கு நிர்ணயிக்கப்பட்ட பணம் செலுத்தப்படாமையின் காரணமாக செயற்திட்டங்கள் இடை நடுவில் நிறுத்தப்பட்டுள்ளது எனவும் பணம் கிடைத்ததன் பின்னர் செயற்திட்டங்களை ஆரம்பிப்பதாகவும் தென் மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாவட்ட பொறியியலாளரால் எனக்கு தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (கா) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் 2017 மே மாதத்தின் போது ஏற்பட்ட வெள்ளத்தால் சேதங்களுக்கு உள்ளாகிய வீதிகளைப் புனரமைப்புச் செய்வதன் கீழ் திட்டமிடப்பட்ட மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 7.79 மில்லியன் தொகையான 03 வீதிகளின் வேலைகள் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் 2019 மே 15 ஆந் திகதி வரை அச் செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. 2019 மே 15 ஆந் திகதி வரை ஒரு செயற் திட்டத்திற்காக ரூபா 10,709 | விரைவாக செயற்திட்ட வேலைகளை முடிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒரு வீதிக்குரிய நிறுவனத்தின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாமையின் காரணமாக செயற்திட்டத்தை நிறைவேற்றுவது சிக்கலானதாக இருந்தமை மற்றும் ஏனைய இரண்டு வீதிகளுக்காக பணத்தை பெற்றுக்கொள்வது தாமதித்தன் காரணமாகவும் வேலையைத் தொடர்ந்து செய்வதற்கு அங்கீகரிக்கப்பட்டதா என்பதற்கு முறையான பதில்கள் கிடைக்காமையின் காரணமாகவும் செயற்திட்டங்களை |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்பட்டிருந்தது. | | அமுல்ப்படுத்துவதற்கு முடியாதிருந்தது. |
| (கி) | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் நாகொட பிரதேச செயலகத்தால் கம்பெரலிய நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டிருந்த மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 83.33 மில்லியன் தொகையான 99 அபிவிருத்திச் செயற்திட்டங்களும் கிராமிய உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் கீழ் திட்டமிடப்பட்ட மதிப்பீட்டுக் கிரயம் ரூபா 1.47 மில்லியன் தொகையான 03 அபிவிருத்திச் செயற்திட்டங்களும் வரிசை அமைச்சினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் அடிப்படையில் அமுல்ப்படுத்தப்படாது கைவிடப்பட்டிருந்தன. | வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை ஆக்கபூர்வமாக பயன்படுத்துவது தொடர்பாக கவனம் வெலுத்தப்படுதல் வேண்டும். | 2018 ஒக்தோபர் 26 ஆந் திகதிய அமைச்சரவை மாற்றத்தின் காரணமாக உரிய வரிசை அமைச்சினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் அதுவரை ஆரம்பிக்கப்படாத வேலைகளை கைவிட வேண்டி ஏற்பட்டிருந்தது. |

3.4 பெறுகைகள்

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சிபார்சுகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | நாகொட பிரதேச செயலகத்தால் அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் வழிகாட்டியின் பிரகாரம் பெறுகைத் திட்டங்கள் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. 2018 ஆம் ஆண்டிற்கான திருத்திய பெறுகைத் திட்டம் 2018 ஏப்ரல் மாத்தின் போது பிரதேச செயலகத்தால் தயாரிக்கப்பட்டு மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிந்தும் கணக்காய்வுத் திகதியான 2018 யூலை 13 ஆந் திகதி வரை மாவட்ட செயலத்தால் அது அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | முறைப்படியான பெறுகைத்திட்டத்தை தயாரித்து மாவட்ட செயலகத்திற்கு சமர்ப்பித்து அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்ததுடன் நிர்ணயிக்கப்பட்ட திகதியில் பெறுகைக்குழு மற்றும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக் குழுவை நியமித்து கேள்வி ஆவணங்களைத் தயாரிப்பதற்கு ஆலோசனை தெரிவித்தலும் வழிகாட்டுதல்களும் | பெறுகைத் திட்டத்தை அனைத்து விபரங்களையும் உள்ளடக்கும் வகையில் தயாரிப்பதற்கு பிரதேச செயலகத்திற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. |
| (ஆ) | மாவட்ட செயலகத்தின் 7 ஆவது மாடியிலுள்ள கேட்போர் கூடத்திற்காக வயர்களற்ற ஒலிபெருக்கி முறைமையைக் கொள்வனவு செய்வதற்காக ஒரு தனியார் நிறுவனத்திற்கு 2018 ஒக்தோபர் 29 ஆந் திகதி ரூபா 7.51 மில்லியன் செலுத்தப்பட்டிருந்தது. 2018 ஆம் ஆண்டிற்கான பெறுகைத் திட்டத்தின் பிரகாரம் மேற்கூறிய ஒலிபொருக்கி முறைமையைக் கொள்வனவு செய்யும் நடவடிக்கையானது 2018 செப்தெம்பர் 30 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட வேண்டிய போதிலும் ஒரு மாத்திற்கு அண்மித்த தாமதத்தின் பின்னர் 2018 ஒப்தோபர் 29 ஆந் திகதி இப் பெறுகை நடவடிக்கை பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. மேலும் மதிப்பீடு செய்யப்பட்ட கிரயம் ரூபா 6.6 மில்லியனாக பெறுகைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டிருந்தும் உள்ளபடியான செலவு ரூபா 7.5 மில்லியனாக இருந்ததனால் ரூபா 0.9 மில்லியனால் திட்டமிடப்பட்ட கிரயத்தை மிகைந்திருந்தது. | கிரய மதிப்பீட்டினை சரியாக முன்அறிந்து கொள்வதற்கும் நிர்ணயிக்கப்பட்ட காலத்தினுள் திருத்தங்களை மேற்கொண்டு அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்வது தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படுதல் வேண்டும். | உரிய பெறுகைச் செயற்பாடுகளுக்காக ஒரு மாதம் அளவான தாமதம் இடம்பெற்றிருந்தமை ஏற்றுகொள்ளப்படுவதுடன் காலத்தையும் கிரயத்தையும் திருத்தம் செய்து திருத்திய பெறுகைத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. |
| (இ) | அரசாங்க பெறுகை வழிகாட்டிக் கோவையிலுள்ள ஒழுங்கு | பெறுகை வழிகாட்டிக் கோவையின் 3.4 (உ) | உரிய பெறுகைகச் செயற்பாடுகள் வரையறுத்த |

| | | |
|---|---|---|
| விதிகளின் பிரகாரம் சந்தைவிலை ஒப்பீட்டு முறைமை பின்பற்றப்படுவதாக இருந்தால் பெறுகைக்குழு அங்கத்தவர்களுக்கும் அது தொடர்பான உத்தியோகத்தர்களுக்கும் எதுவித படிகளும் செலுத்த முடியாது என்ற போதிலும் மாவட்ட செயலகத்தில் விலை ஒப்பீட்டு முறையைப் பின்பற்றி நிறைவேற்றப்பட்ட இரண்டு பெறுகைச் செயற்பாடுகளுக்காக குழு அங்கத்தவர்களுக்கு ரூபா 58000 மொத்த தொகை செலுத்தப்பட்டிருந்தது. | வழிகாட்டியின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | விலை மனுக்கோரல்களின் கீழ் இடம்பெற்றுள்ளது. |

**3.5 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதில் வழங்கப்படாமை**

பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றது

| | கணக்காய்வு ஐயவினா தொடர்பான விபரம் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஏப்ரல் 2 ஆந் திகதி வரை வழங்கப்பட்ட 2018 ஆம் ஆண்டுக்கான 08 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு 2019 மே 15 ஆந் திகதி வரை பதில் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு ஐயவினாக்களில் காட்டப்பட்டுள்ளவாறு உரிய திகதிக்கு முன்னர் பதில்கள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். | 2019 மே 31 வரை பதில்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

**3.6 முகாமைத்துவ பலவீனங்கள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | கிராமங்களை விரிவுபடுத்துதல் நிகழ்ச்சித்திட்டங்களின் கீழ் நாகொட பிரதேச செயலகத்தினால் ஆட்கள் குடியிருப்பதற்காக 467 ஏக்கர் அளவுள்ள எப்தொப்வத்த எனும் பெயருள்ள காணியை அரசாங்கம் பெறுப்பேற்கும் நடவடிக்கை 1999 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தும் 2018 யூலை 13 ஆந் திகதி வரை அக் காணியைப் பொறுப்பேற்கவில்லை. மேலும் பொது மக்களை | உருவாகியுள்ள பிரச்சினையை விரைவாகத் தீர்த்து இக் காணியை கிராமங்களை விரிவுபடுத்தும் நிகழ்சசித்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக பயன்படுத்துதல் | 1999 ஆம் ஆண்டில் காணியைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 40 அத்துமீறிக் குடியிருப்பாளர்களின் பயன்படுத்தும் உரிமையை மீளப்பெற்றுக்கொள்ளும் அதிகாரச் சட்டத்தின் கீழ் வழக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மரங்களை வெட்டும் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | குடியமர்த்துவதற்காக இக் காணியை வாங்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்தும் அதில் குடியிருப்பதற்கு பொருத்தமற்ற நிலையில் காணி காணப்படுதல், வாங்கப்பட்ட காணியை உரிய நோக்கத்திற்காக பயன்படுத்தப்படும் வரை அக் காணியை அத்துமீறிக் குடியிருப்பாளர்களிடமிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு முடியாமை, பகிர்ந்தளிக்கப்பட்ட காணிகளை உரித்தற்ற ஏனைய வெளித் தரப்பினர்களுக்கு ஒப்படைத்தமை, உரிய காணியில் காணப்பட்ட பாரிய காடுகள் அத்துமுறிக் குடியிருப்பாளர்களால் வெட்டி வெளியாக்கப்பட்டமை மற்றும் அதன் மூலம் அதிக அளவு சுற்றாடல் பாதிப்புக்கள் ஏற்பட்டிருந்தது. | | நடவடிக்கை சம்பந்தமாக பொலிசுக்கு முறைப்பாடு செய்து வழக்கு தாக்கல் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் காணியின் உரிமை சம்பந்தமான வழக்கு விசாரணைக்கான தீர்ப்பு இதுவரை வழங்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | | அலுவலகத்தின் ஒரு மோட்டார் வாகனம் 2014 ஆம் ஆண்டிலிருந்து பாவனையிலிருந்து ஒதுக்கிவைக்கப்பட்டு கைதவிர்ப்புச் செய்வதற்கு சிபார்சு செய்யப்பட்டிருந்தும் அந் நடவடிக்கை 2019 மே 31 ஆந் திகதி வரை முடிவுறுத்தப்பட்டிருக்கவில்லை | 1998 நவம்பர் 27 ஆந் திகதிய நிதி 353 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும் | இவ் வாகனத்தை ஒரு பாடசாலைக்கு ஒப்படைக்கும் நடவடிக்கைக்காக கடிதம் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது எனவும் அதற்கான பதில் கிடைக்காவிட்டால் ஏலத்தில் விற்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். எனவும் தெரிவிக்கிறேன். |
| (இ) | (i) | காலி மாவட்ட செயலாளர் உத்தியோகபூர்வ இல்லத்தை நிர்மாணிக்கும் வேலையானது கட்டிடங்களை நிர்மாணிப்பதற்குரிய ஒப்பந்தமாக இருந்ததுடன் அதற்காக கேள்விகளைக் கோரும் போது கேள்விதாரர்களுக்கு கட்டிடங்களை நிர்மாணிக்கும் C4 உடன் வீதிகளை நிர்மாணிப்பது சம்பந்தமான C4 தகமைகளும் இருக்க வேண்டுமெனக் காட்டப்பட்டிருந்தது. இதன் காரணமாக போட்டியான கட்டங்களை நிர்மாணிப்பதற்குரிய உயர்ந்த தகைமையுடனான | கட்டிடத்தை நிர்மாணிப்பதற்காக C4 தகமையினை மாத்திரம் நிர்ணயிக்கப்பட்ட தேவையாகக் கருதி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவின் சிபார்சின் பிரகாரம் கணிசமான மறுதலிப்புச் செய்த கேள்விதாரர்களுக்கு பொறியியலாளர் மதிப்பிட்டிற்கு வேலைகளை நிறைவேற்றும் ஆற்றல் சம்பந்தமாக விசாரிக்கப்பட்டுள்ளதுடன் அவர்களினால் அப்போது நாட்டில் காணப்பட்ட பொருட்களின் விலை அதிகரித்துச் செல்லும் போக்கு, விலை அதிகரிப்பிற்காக கொடுப்பனவு செய்யும் நடைமுறையானது பெறுகை ஆவணங்களின் உள்ளடக்கப்படாமை ஆகிய விடயங்களின் காரணமாக மதிப்பீட்டுப் பெறுமதிக்கு வேலைகளைச் செய்ய முடியாது எனத் |

| | | |
|---|---|---|
| கேள்விதாரர்கள் முன் வருவது தவிர்க்கப்பட்டிருந்தது. இது சம்பந்தமாக தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு அல்லது பெறுகைக் குழு கவனம் செலுத்தியிருக்கவில்லை. அதன் காரணமாக பொறியியலாளர் மதிப்பீட்டினை விட உயர்ந்த விலைகளுக்கு ஒப்பந்தத்தை வழங்க வேண்டி ஏற்பட்டிருந்தது. மேலும் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவின் சிபார்சினை கவனத்தில் கொள்ளாது பெறுகைக்குழு செயற்பட்டதன் காரணமாக அரசாங்கத்திற்கு ரூபா 3256251 தொகையான நட்டம் ஏற்பட்டிருந்தது. | | தெரிவிக்கப்பட்டிருந்தது. |
| (ii) மேற்கூறிய வேலைக்காக மேற்படி ஆகக்குரைறந்த கேள்வியைச் சமர்ப்பித்த தகமையுள்ள கேள்விதாரர் தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழு மற்றும் பெறுகைக் குழுவினால் நிராகரிக்கப்பட்டதன் காரணமாக மேற்கூறிய ஒப்பந்தத்தை வழங்கும் போது அரசாங்கத்திற்கு கிடைக்கக்கூடியதாகவிருந்த ரூபா 5548414 நலன் இழக்கப்பட்டிருந்தது. | | ஆகக்குறைந்த விலை மனுவைச் சமர்ப்பித்த கேள்விதாரர்களின் கடந்த 05 ஆண்டு காலத்தின் சமமான வேலைகளை நிறைவேற்றுவது சம்பந்தமாக திருப்தி கொள்ள முடியாதிருந்ததனால் ஒப்பந்தம் வழங்கப்படவில்லையென தொழில்நுட்ப மதிப்பீட்டுக்குழுவினால் சிபார்சு செய்யப்பட்டிருந்தது. |

## 4. நிறைபேறான அபிவிருத்திக் குறிக்கோள்களை அடைந்து கொள்ளல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| ஐக்கிய நாடுகள் அமைப்பினால் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரல் 2030 இன் பிரகாரம் அடைந்துகொள்ள வேண்டிய இலக்குகளும் இலக்குகளை அடைந்து கொள்வதற்கான ஆயத்தமும் தொடர்பாக பரீசித்த போது மாவட்ட செயலகத்தினால் நிலைபேறான அப்விருத்தி நிகழ்ச்சிநில் 2030 இல் உள்ளடக்கப்பட்ட அபிவிருத்தி குறிக்கோள்களையும் இலக்குகளையும் 2018 ஆம் ஆண்டின் போது முறையாக இனங்கண்டு கொள்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை | நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சிநில் 2030 இல் உள்ளடக்கப்பட்ட குறிக்கோள்களும் இலக்குகளும் இனங்காணப்பட்டு அக் குறிக்கோள்களை அடைந்து கெள்வதற்கான திட்டங்களைத் தயாரித்து | நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள் தொடர்க பயிற்சி செயலமர்வு ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது எனவும் அப் பயிற்சியையும் கருத்தில் கொண்டு 2019 ஆம் ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. |

நடைமுறைப்படுத்தல் வேண்டும்.

## 5. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சிபார்சு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் 3,181 ஆன அங்கீகரித்த பதவியணியினர்களில் 172 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன் அவ்வெற்றிடங்களை முறைப்படி நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதனுள் சிரேஷ்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 105 பதவிகளில் 20 பதவிகளும் மூன்றாம் மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 44 பதவிகளில் 18 பதவிகளும் நாடவளாவியரீதியான மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட 2848 பதவிகளில் 132 பதவிகளும் வெற்றிடமாகக் காணப்பட்டன. அதனுள் நாடளாவியரீதியான மட்டத்திலான 39 பதவிகள் மிகையாகவும் காணப்பட்டன. மேலும், முறையான அங்கீகாரமின்றி அங்கீகரித்த பதவியணியினரை மிகைத்து 42 உத்தியோகத்தர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டிருந்தனர் | அங்கீகரித்த பதவியணியிலுள்ள வெற்றிடங்களை நிரப்பி பொதுமக்களுக்கான சேவையை ஆக்கபூர்வமாக நிறைவேற்ற வேண்டியதுடன் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொள்ளாத பதவியணியினரை இனங்கண்டு அதற்கான தேவையான அங்கீகாரத்தினைப் பெற்றுக் கொண்டு பதவியணியினரை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | வெற்றிடமான பதவியணியினர் சம்பந்தமாக அமைச்சுக்கு மாதாந்தம் தகவல்கள் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் நியமன அதிகாரி அங்கீகரித்த எல்லையை மிகைத்து அங்கீகரித்ததன் அடிப்படையில் மிகைகள் ஏற்பட்டிருந்தது. |